**ஏப்ரல் – 18**

# TNPSC துளிகள்

- இயங்கு படம், மெருகுக் காட்சிகள், விளையாட்டு செயலிகள், கேலிச் சித்திரங்கள் நுட்பம் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட (மெய் மற்றும் மிகை மெய்த் தோற்றங்களின் கலவை) மெய்த் தோற்றங்கள் (AVGC-XR) துறைக்காக வேண்டி அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உலகத் தரம் வாய்ந்த நிறுவனத்தினை நிறுவுவதற்காக மும்பையில் உள்ள இந்தியப் படைப்பாக்க நுட்பக் கல்வி நிறுவனம் (IICT) பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.
- மேகாலயா மாநில அரசானது, குழந்தைகளின் கட்டாய உயிரியளவியல் தகவல் மீதான புதுப்பிப்புகளை மேற்கொள்வதிலும், அங்கு வயது வந்தோரின் ஆதார் சேர்க்கையை நன்கு சரிபார்ப்பதிலும் சிறப்பாகச் செயல்படும் ஒரு மாநிலமாக இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்திடமிருந்து (UIDAI) இரண்டு சிறந்த விருதுகளைப் பெற்றது.
- ACI வேர்ல்டு நிறுவனத்தின் கூற்றுப் படி, டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் உலகின் 9வது பரபரப்பான விமான நிலையமாக மாறி உள்ளது.
- இந்திய எண்ணெய் உற்பத்திக் கழக நிறுவனம் (IOC) ஆனது, ஒடிசாவில் உள்ள அதன் பாரதீப் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் மிக உலகத் தரம் வாய்ந்த பெட்ரோலிய வேதியியல் வளாகத்தினை அமைக்க 61,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- இந்திய உட்சுரப்பியல் (நாளமில்லா சுரப்பி) நிபுணர் டாக்டர் அம்ப்ரிஷ் மிதலுக்கு, எலும்புப் புரை ஆராய்ச்சிக்கு ஆற்றிய மகத்தானப் பங்களிப்புகளுக்காக சர்வதேச எலும்புப் புரை அறக்கட்டளையால் (IOF) 2025 ஆம் ஆண்டிற்கான அறிவியல் ஆலோசகர்கள் குழுவின் (CSA) சாதனைப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள குனோ தேசியப் பூங்காவிலிருந்து காந்தி சாகர் வன விலங்குச் சரணாலயத்திற்கு சில சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்வதற்கு சிவிங்கிப் புலிகள் திட்ட வழிகாட்டுதல் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- வேளாண்மை தொடர்பான 3வது BIMSTEC அமைப்பின் அமைச்சர்கள் கூட்டம் நேபாளத்தின் காத்மாண்டு நகரில் நடைபெற்றது.
- ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிலைய விருதுகள் பட்டியலில், சிங்கப்பூர் சாங்கி விமான நிலையம் ஆனது 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் ஒரு சிறந்த விமான நிலையமாக இடம் பெற்றுள்ளது.
- பீகார் மாநில முதல்வர் பாட்னாவில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளுக்கான அதிகாரப் பூர்வ உருவச் சின்னம் மற்றும் அதன் முத்திரையினை வெளியிட்டார்.
    - அந்த உருவச் சின்னம் ஆனது, யானையின் ஆற்றலையும் சிங்கத்தின் இதயத்தையும் குறிக்கும் "கஜ்சிம்ஹா" ஆகும்.
- சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியுடன் (ISA) உலக நாடுகள் கூட்டுக் கட்டமைப்பில் (CPF) கையெழுத்திட்ட முதல் ஆப்பிரிக்க நாடாக மொரிஷியஸ் மாறியுள்ளது.
    - வங்காளதேசம், பூடான் மற்றும் கியூபாவிற்குப் பிறகு, இந்தக் கட்டமைப்பை அதிகாரப் பூர்வமாக்கிய நான்காவது நாடு இந்தத் தீவு நாடாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## குரியன் ஜோசப் குழு

- இந்திய மாநிலங்களின் முதன்மை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை மறுசீரமைப்பதற்குமான நடவடிக்கைகளை மறுபரிசீலனை

செய்து பரிந்துரைப்பதற்காக என்று ஓர் உயர் மட்டக் குழுவை அமைப்பதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் இக்குழுவிற்குத் தலைமை தாங்க உள்ளார்.
- இந்தக் குழுவில் முன்னாள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் பொருளாதார நிபுணர் M. நாகநாதன் ஆகியோரும் அடங்குவர்.
- முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் 1969 ஆம் ஆண்டு மத்திய-மாநில அரசு உறவுகளை ஆய்வு செய்வதற்காக இராஜமன்னார் குழுவை அமைத்தார்.
- இராஜமன்னார் குழுவானது 1971 ஆம் ஆண்டில் அதன் விரிவான ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது.
- இதைத் தொடர்ந்து மத்திய அரசு 1983 ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணையத்தையும் பின்னர் 2007 ஆம் ஆண்டில் புஞ்சி ஆணையத்தையும் அமைத்து மத்திய-மாநில அரச உறவுகள் குறித்து மேலும் ஆய்வு செய்தது.




# தேசியச் செய்திகள்

## 2047 ஆம் ஆண்டில் இந்திய வேளாண்மை

- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையானது, 2047 ஆம் ஆண்டில் இந்திய வேளாண்மை - நிலையான மேம்பாட்டிற்காக வேண்டிய கொள்கைகளை மறுவடிவமைத்தல் என்ற தலைப்பிலான ஒரு கொள்கை ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த உணவுத் தேவையானது, தற்போதைய தேவையை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அதே சமயம், தோட்டக்கலை மற்றும் விலங்குத் தீவனங்கள் உள்ளிட்ட ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளுக்கான தேவையானது மூன்று முதல் நான்கு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆனால், இந்த நன்கு அதிகரித்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய தேவையான வேளாண் நிலம் ஆனது, தற்போதைய 180 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலிருந்து 176 மில்லியன் ஹெக்டேர் (mha) ஆக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பாரம்பரிய உணவுப் பொருட்களிலிருந்து வளங்களை மிகவும் ஒரு மாறுபட்ட மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த பொருட்களுக்கு மாற்றுவதற்கு ஆராய்ச்சியாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த நாடாக

மாறுவதற்கு ஆண்டிற்குத் தோராயமாக எட்டு சதவீத வளர்ச்சி தேவைப்படும்.

- அதே நேரத்தில், சுமார் பாதி எண்ணிக்கையிலான இந்தியர்கள் நகர்ப்புறங்களில் வசிப்பதுடன் நாட்டின் மக்கள் தொகை 1.6 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- வேளாண் உற்பத்தியின் மொத்த மதிப்பில் கால்நடைகளின் பங்களிப்பு தற்போதைய 31 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாகவும், மீன்வளத்தின் பங்களிப்பு 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும் அதிகரிக்குமென கணிப்புகள் தெரிவிக்கின்றன.




## LRGB 'கௌரவ்'





- 'கௌரவ்' எனப்படும் தொலை தூர வரம்புடைய தட்டையானப் பாதையில் காற்றைக் கிழித்துச் செல்லக் கூடிய குண்டின் (LRGB) வீச்சு சோதனைகளை இந்தியா மிகவும் வெற்றிகரமாக நடத்தியது.
- "கௌரவ்" என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உள் நாட்டிலேயே நன்கு வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட 1,000 கிலோ ரக காற்றைக் கிழித்துச் செல்ல க்கூடிய குண்டு ஆகும்.
- SAAW (திறன் மிகு வான் வெளி எதிர்ப்பு ஆயுதம்) என்று அழைக்கப் படும் இலகுரக காற்றைக் கிழித்துச் செல்லக்கூடிய குண்டு ஆனது ஒடிசாவில் சோதனை செய்யப் பட்டது.
- SAAW என்பது 100 கி.மீ வரையிலான தூரத்தில் உள்ள எதிரி நாட்டு விமான

நிலையங்கள், ஓடுபாதைகள், பதுங்குக் குழிகள் மற்றும் இன்ன பிற வலுவூட்டப்பட்டக் கட்டமைப்புகளைக் குறி வைத்து தாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் இலகுரகத் துல்லியமாக வழி காட்டப்பட்ட குண்டு ஆகும்.

## கவாச் 5.0

- கவாச் 5.0 எனப்படுகின்ற ஒரு மேம்படுத்தப்பட்ட தானியங்கி இரயில் பாதுகாப்பு அமைப்பினை அறிமுகப் படுத்துவதற்கான திட்டங்களை மத்திய இரயில்வேத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த கவாச் 5.0 அமைப்பானது ரயில்களுக்கு இடையேயான பயணத் தொலைவினை மிக கணிசமாகக் குறைத்து, ரயில்களைப் பாதுகாப்பாகவும் திறமையாகவும் இயக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கவாச் என்பது இந்தியாவின் உள்நாட்டு தானியங்கி இரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பு ஆகும்.
- இதில் இரயில் என்ஜின் ஓட்டுநர் செயல்படத் தவறினால் வேகக் கட்டுப்பாட்டு நிறுத்த அமைப்பினைத் தானாகவே செயல்படுத்துவதன் மூலம் இரயில் மோதல்களை உடனே தடுப்பதற்காக இது உருவாக்கப்பட்டது.
- சுமார் 65,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்திலான உலகின் நான்காவது பெரிய இரயில் வலையமைப்பை இந்தியா இயக்கி வருகிறது.





# சர்வதேசச் செய்திகள்

## மூளைக்காய்ச்சலுக்கான முதல் வழிகாட்டுதல்கள்

- இந்த நோயானது எவ்வாறு கண்டறியப்படுகிறது, சிகிச்சையளிக்கப்படுகிறது மற்றும் மேலாண்மை செய்யப்படுகிறது என்பதை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட அதன் முதல் மருத்துவ வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இந்த மிகவும் விரிவானதொரு ஆவணமானது, நோயாளியின் சிகிச்சை விளைவுகளை மேம்படுத்துதல், உயிர்களைக் காப்பாற்றுதல் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கு மிக


நீண்ட காலப் பராமரிப்பை ஆதரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்க உள்ளது.

- பெரும்பாலும் தொடங்கிய 24 மணி நேரத்திற்குள் உயிர்களைக் கொல்கின்ற மூளைக் காய்ச்சலானது, குறிப்பாக அதன் பாக்டீரியா வடிவமானது, மிக ஆபத்தான தொற்று நோய்களில் ஒன்றாக உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கை 2025





- சர்வதேச நாணய நிதியம் ஆனது, சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு உலகளாவிய நிதி நிலைத் தன்மை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, உலகளாவிய நிதி அமைப்பு மற்றும் உலகச் சந்தைகளின் மதிப்பீட்டை வழங்குவதோடு மேலும் உலகளாவியச் சூழலில் வளர்ந்து வரும் சந்தை நிதியுதவி விவகாரங்களை கவனிக்கிறது.
- உலகளாவியப் புவிசார் அரசியல் அபாயங்கள் அதிகரித்த நிலையில், பெருநிலைப் பொருளாதார நிதியின் உறுதித் தன்மைக்கு அவற்றின் சாத்தியமான தாக்கம் குறித்த கவலைகளை இது எழுப்புகிறது.
- குறைந்தபட்ச உலகளாவிய வரியையே பல நாடுகள் ஏற்பதாலும் மற்ற சில நாடுகள் பலதரப்பு வரிக் கொள்கையிலிருந்து விலகுவதாலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
- அதிகரித்த இராணுவச் செலவினம் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகள் ஆனது, அரசின்

கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையே உள்ள முக்கிய விகிதங்களை உயர்த்தி, நிதி நிலைத் தன்மைச் சிக்கல்கள் மற்றும் இறையாண்மை ஆபத்தை நன்கு அதிகரிக்கின்றன.

- புவிசார் அரசியல் அபாயங்கள் என்பவை பொதுவாக முதலீட்டாளர் நம்பிக்கையைக் குறைக்கின்றன என்பதோடு இது சந்தையின் நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிகமான ஏற்ற இறக்கத்திற்கு வழி வகுக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## கியாசனூர் வன நோய் 2025




- "குரங்கு காய்ச்சல்" என்றும் அழைக்கப்படும் கியாசனூர் வன நோய் (KFD) மீதான பாதிப்பானது கர்நாடகாவில் அதிகரித்து வருகிறது.
- ஒரு உண்ணி மூலம் பரவும் இந்த வைரஸ் நோய் ஆனது, வனப் பகுதிகளிலும் அதைச் சுற்றியும் வாழும் மக்களுக்கு கடுமையான உடல்நலப் பாதிப்பினை ஏற்படுத்துகிறது.
- KFD என்பது ஃபிளாவிவிரிடே குடும்பத்தைச் சேர்ந்த கியாசனூர் வன நோய் வைரஸ் (KFDV) காரணமாக ஏற்படும் வைரஸ் இரத்தக்கசிவு காய்ச்சல் ஆகும்.
- இது முதன்முதலில் 1957 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் கியாசனூர் பகுதியில் உள்ள ஒரு காட்டில் கண்டறியப் பட்டது.
- மிக முதன்மையாக பாதிக்கப்பட்ட உண்ணி, குறிப்பாக ஹீமாபிசாலிஸ் ஸ்பினிகேரா கடிப்பதன் மூலம் மனிதர்கள், பாதிக்கப்படுகின்றனர்.
- சிறிய பாலூட்டிகள், குரங்குகள் மற்றும் பல உண்ணிகள் உள்ள வனச் சுற்றுச்சூழல் அமைப்புகளில் இந்த வைரஸ் காணப்படுகிறது.
- மனிதர்கள் இந்த நோய்களைக் கடத்தும் கிருமிகளால் மிகத் தற்செயலாகப் பாதிக்கப் படுவதால் நோய் பரப்புதல் சுழற்சியில் அவர்கள்பங்கு வகிப்பதில்லை.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## குமுதினி லக்கியா

- இந்திய செவ்வியல் நடனக் கலைஞர் மற்றும் கதக் நடனக் கலையில் புகழ்பெற்ற ஒரு நபரான குஜராத்தின் குமுதினி லக்கியா காலமானார்.

- 1967 ஆம் ஆண்டில் கதக் நடனத்தினை மறுசீரமைப்பு செய்வதற்கு ஏற்றதாக அமைந்த கடம்ப் நடன மையத்தை நிறுவினார்.
- அவர் பத்மஸ்ரீ (1987), பத்ம பூஷண் (2010) மற்றும் பத்ம விபூஷண் (2025) விருதுகளைப் பெற்றுள்ளார்.



### பழங்குடியினக் கலைஞர் 'கிட்னா'



- "கிட்னா" என்று அழைக்கப்படுகின்ற மிகவும் புகழ்பெற்ற பழங்குடியினக் கலைஞர் R. கிருஷ்ணன் சமீபத்தில் காலமானார்.
- இவர் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் ஆலு குரும்பர் என்ற சமூகத்தினைச் சேர்ந்த நபர் ஆவார்.
- சுமார் 30 ஆண்டுகளாக, கிருஷ்ணன் தனது கிராமத்தில் சுமார் 3,000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான பாறை ஓவியக் கலையால் ஈர்க்கப்பட்டு, தனது சமூகத்தின் தனித்துவமான கலைப் பாணியைத் தனியொருவராகப் பிரபலப்படுத்தினார்.
- வனப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட இயற்கை நிறமிகளை மட்டுமே பயன்படுத்தி, ஆலு குரும்பர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஆயிரக்கணக்கான ஓவியங்களை அவர்

உருவாக்கினார்.

- அதன் இயற்கையான வண்ணப்பூச்சுகள் மற்றும் தகுநய நடை கொண்டதாக வகைப் படுத்தப் படும் "எழுத்துப் பாறை" பாறை ஓவியக் கலைத் தளத்தில் காணப்படும் ஆலு குரும்பக் கலை, மற்ற கலை வடிவங்களிலிருந்து அதனை வேறுபடுத்திக் கொள்கிறது.

### மரங்களின் மனிதன் - தரிப்பள்ளி இராமையா

- பத்மஸ்ரீ விருது பெற்ற 'வனஜீவி' இராமையா தெலுங்கானாவின் கம்மம் மாவட்டத்தில் காலமானார்.
- தாரிப்பள்ளி இராமையா அவர்கள், கம்மம் மாவட்டத்தில் "சேட்டு (மரம்) இராமையா" அல்லது "வனஜீவி" என்று பிரபலமாக அறியப்படும்.
- கடந்த பல தசாப்தங்களாக, ஒரு கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டதற்காக 2017 ஆம் ஆண்டில் அவர் பத்மஸ்ரீ விருதைப் பெற்றார்.





## இதரச் செய்திகள்

### தோடா எருமை இனத்தின் காப்பினப் பெருக்கம்

- கடந்த 30 ஆண்டுகளாக தோடா எருமைகளின் எண்ணிக்கை சுமார் 90 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்துள்ளது.
- இது தோடா பழங்குடியினரின் கலாச்சாரத்துடன் நன்கு இணைக்கப்பட்ட ஒரு பூர்வீக நீர் எருமை இனமாகும்.
- தோடா பழங்குடியினர் தமிழ்நாட்டில் உயர் நீலகிரி பீடபூமியில் வசிக்கின்ற மிகவும் பழமையான திராவிட இனக் குழுக்களில் ஒருவர் ஆவர்.
- ஒரு புதிய முன்னெடுப்பாக, நீலகிரியில் உள்ள சாண்டினல்லாவில் உள்ள செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஆனது, மலைகளில் உள்ள இந்த எண்ணிக்கையை மீண்டும் நன்கு நிலை நிறுத்த உதவச் செய்யம் வகையில் ஒரு காப்பினப் பெருக்கத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்த எருமைகளின் ஒரு எண்ணிக்கையானது, சில தசாப்தங்களுக்கு முன்பு நீலகிரி முழுவதும் 15,000 முதல் 20,000 வரை இருந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★